**இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கைப் பேரவை**
**கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

SLCARP

# வெற்றிடங்கள்

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை பேரவையில் நிலவும் கணக்காளர் பதவிக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## கணக்காளர் – (MM 1-1)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வர்த்தகவியல் அல்லது கணக்கியல் துறையில் இளமாணிப் பட்டம்

அல்லது

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) இடைநிலை நிலைத் தகைமை

அல்லது

கணக்கியலில் உயர்தர தேசிய டிப்ளோமா

மற்றும்

அரச திணைக்களம் / பொதுக் கூட்டுத்தாபனம் / சபை அல்லது கீர்த்திவாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் கணக்கியல் மற்றும் நிதித் துறையில் தகைமைக்குப் பின் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவம்.

**குறிப்பு:** கணினிமயமாக்கப்பட்ட சூழலில் உள்ள அனுபவம் ஒரு தனித்துவமான அனுகூலமாகும்.

**சம்பளக் குறியீடு மற்றும் ஊழியர் பிரிவின் மாதச் சம்பள அளவு**

*MM 1-1 - 2025 ரூ. [91,690 - 10x2,480 - 15x3,450 - ரூ. 168,240]

**(முகாமைத்துவ சேவைகள் திணைக்கள 01/2025ஆம் இலக்க சுற்றறிக்கையின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்)**

வயது: வயது 22 ஆண்டுகளுக்குக் குறையாமலும் 45 ஆண்டுகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஏனையவை:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:

(i) இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

(ii) இப்பதவியின் கடமைகளைச் சிறப்பாக ஆற்றுவதற்கும், தீவின் எந்தப் பகுதியிலும் சேவை செய்வதற்கும் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

(iiii) சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

தலைவர், இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை பேரவை, இல. 114/9, விஜேராம மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்கு முகவரியிடப்பட்ட முகப்புக் கடிதம் சகிதம் சுயவிபரக் குறிப்பு (CV) அல்லது தேவையான தகவல்களை வழங்கும் விண்ணப்பங்களுடன் கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் வேலை அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு சான்றுபகர்வோரின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் பதிவுத் தபாலில் 2026-10-27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை பேரவைக்கு அனுப்பப்பட வேண்டும்.

அரச துறை ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரிய வழிமுறைகள் ஊடாக அனுப்பப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க முடியுமா இல்லையா என்பது பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடப்பட வேண்டும். மேற்கூறிய தேவைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள், முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கை பேரவை,**
**இல. 114/9, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு - 07.**

Gazette.lk